தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2023

## வளர்தமிழ் 4

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 120 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 05 | | | |
| 3 | 05 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 10 | | | |
| 8 | 10 | | | |
| 9 | 05 | | | |
| 10 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. வெந்நீர் ஊற்றுகள் அமைந்துள்ள இடம் ________________.

( திருமலை, மட்டக்களப்பு, மன்னார் )

2. அவன் பாய்கின்றான். அது ________________.

( பாய்கின்றன, பாய்கின்றனர், பாய்கின்றது )

3. ________________ க் கொண்டுள்ள கடலில் எண்ணற்ற உயிரிகள் வாழ்கின்றன.

( நன்னீரை, உவர்நீரை, மழைநீரை)

4. தோற்கருவி என்ற சொல்லைப் பிரித்தால் ________________.

( தோல் + கருவி, தோற் + கருவி, தோற்க் + கருவி )

5. ஈசன் எனப் போற்றப்பட்டவன் ________________.

( அதியர்மான், இராவணன், சங்கிலியன் )

6. எல்லாளன் இலங்கையை ________________ ஆண்டுகள் ஆண்டான்.

( 34, 22, 44 )

7. நான் வீட்டுப்பாடம் செய்ய வேண்டும். ________________ எனக்கு விளையாட நேரமில்லை.

(அப்போது, இப்போது, எப்போது )

8. வேப்பம் பூவில் செய்யப்படும் உணவு ________________ .

( முறுக்கு, வடை, வடகம் )

9. பழமொழி:

அன்னம் இட்ட வீட்டில் ________________ இடாதே.

( கன்னம், வன்னம், வண்ணம் )

10. வளி என்பதன் பொருள் ________________ .

( நெருப்பு, காற்று, வானம் )

11. ஒலிவட்டு:

நாடுகாத்த சிறுவன் என அழைக்கப்பட்ட பிரிங்கர் ________________ நாட்டைச் சேர்ந்தவன்.

( ஒல்லாந்து, பிரித்தானியா, இத்தாலி )

12. அம்மா தேநீரைச் ________________ க் குடித்தார்.

( கடகட, படபட, சுடச்சுட )

13. கிளி பேசும். அது போல காகம் ________________ .

( கரையும், கத்தும், கூவும் )

14. மாணவர் ________________ வணக்கம் கூறினர்.

( ஆசிரியருக்கு, ஆசிரியரை, ஆசிரியரின் )

15. உணவு பழுதடையாமல் இருப்பதற்காகச் சேர்க்கப்படுவது

________________ .

( இஞ்சி, மஞ்சள், ஓமம் )

16. ள் என்ற எழுத்து ____________

( மெய் எழுத்து, உயிர் எழுத்து, உயிர்மெய் எழுத்து )

17. ஏட்டுச்சுவடிகளை அச்சேற்றியவர் ____________ .

( சின்னத்தம்பிப்புலவர், தாமோதரம்பிள்ளை, விபுலாநந்தர் )

18. 19 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ____________ .

( பத்துஒன்பது, பத்தொன்வது, பத்தொன்பது )

19. மிகப்பழங்காலந்தொட்டு தமிழ் மக்களிடையே வழக்கில் இருந்து வந்த இசைக்கருவி ____________.

( யாழ், வீணை, வயலின் )

20. “நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி....” என்ற பாடல் இடம்பெற்ற நூல் ____________ .

( நல்வழி, திருக்குறள், மூதுரை )

21. தோற்கருவிகளில் ஒன்று ____________ .

( தாளம், புல்லாங்குழல், மேளம் )

22. பின்வருவனவற்றில் வேறுபட்ட சொல் ____________

( பிட்டு, இளநீர், பொங்கல் )

23. **நொடி:**

ஓடோடும் சங்கிலி; உருண்டோடும் சங்கிலி; பள்ளத்தைக் கண்டால் பாய்ந்தோடும் சங்கிலி. அது என்ன? ____________

( வெள்ளம், குளம், கடல் )

24. ______________ தமிழர் பண்பாட்டை வாழ்வில் பேணுவோம்.

( நீ, நாம், நீங்கள் )

25. முத்தமிழ்க்காப்பியம் என அழைக்கப்படுவது ______________.

( சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு )

26. நாலடியாரில் கரை இல்லாதது எனக் கூறப்படுவது ______________ .

( செல்வம், கல்வி, வீரம் )

27. அப்பா ______________ இன்றி வேலை செய்கின்றார்.

( ஊண்உறக்கம், இன்பதுன்பம், உள்ளும்புறமும் )

28. தேயிலை + தோட்டம் ______________

( தேயிலைதோட்டம், தேயிலைத்தோட்டம், தேயிலத்தோட்டம் )

29. மேசையில் உள்ள உணவுகள் ______________ சுவையானவை.

( அவற்றுள், இவற்றுள், ஒவ்வொன்றும் )

30. **குறள்:**

மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது

அற்றது ______________ உணின்

( போற்றி, தூற்றி, ஏற்றி )

புள்ளிகள் 30

**2) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.**

1. செஞ்சிலுவைச்சங்கம் துன்புறும் __________________ விரைந்து உதவுகிறது.

   ( மக்கள் )

2. உலக அறிஞர்கள் __________________ ப் புகழ்ந்து பேசுவர்.

   ( திருக்குறள் )

3. பெண்கள் __________________ வேலை செய்கின்றனர்.

   ( வயல் )

4. கவிதை __________________ எழுதப்பட்டது.

   ( புலவர் )

5. மாணவர்கள் __________________ காற்பந்து விளையாடுகின்றனர்.

   ( விளையாட்டுத்திடல் )

புள்ளிகள் 05

3) **கட்டங்களில் உள்ள எழுத்துகளில் இருந்து சொற்களை உருவாக்கி வினாக்களுக்கு விடை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| வா | ண் | க | ம் |
| தி | தா | ணீ | X |
| பா | X | ள் | ன் |
| த | ர | X | ம |
| வ | ரை | ர் | பு |

1. வீரன் கையில் வைத்திருப்பது ____________.

2. பயிர்களுக்கு வேண்டிய ஒளியைத் தருவது ____________.

3. குளத்தில் பூக்கும் பூ ____________.

4. நாம் குடிப்பது ____________.

5. புற்றில் வாழும் உயிரி ____________.

புள்ளிகள் 05

## 4) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. பறவைகள் ________________ தேடிப் பறந்தன.

( இரை, இறை )

2. வில்லில் நாணை ஏற்றி அம்பு எய்தபோது ________________ எழுந்தது.

( இசையொலி, இசையொளி )

3. ________________ இலைகள் கீழே உதிர்கின்றன.

( பளுத்த, பழுத்த )

4. அம்மா குழந்தையை அன்பாகக் கட்டி ________________ .

( அணைத்தார், அனைத்தார் )

5. உழவன் விளைந்த நெல்லை ________________ செய்கின்றான்.

( அருவடை, அறுவடை )

| புள்ளிகள் 05 |
|---|

**5) பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. மழை மெல்லமெல்லத் தூறத் ______________________ .

2. நல்ல நட்பே உயர்வைத் ______________________ .

3. தென்னைமரத்தை தெங்கு என்றும் ______________________ .

4. அணில் மரத்திலிருந்து பழத்தைக் ______________________ .

5. ஆசிரியர் எனக்கு நல்ல அறிவுரை ______________________ .

புள்ளிகள் 10

**6) மிகப் பொருத்தமான சொற்களைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| வெட்டி | பொந்தில் | அருகே |
| உணவு | அடைந்தது | |

வீட்டுத் தோட்டத்தில் மாமரம் ஒன்று இருந்தது. அம்மரப் ____________ கிளிகள் வாழ்ந்தன. அந்த மாமரம் நீண்டகாலமாக காய்க்கவில்லை. அதனால் ஒரு பெரியவர் அம்மாமரத்தை ____________ வீழ்த்தினார். அவ்வேளையில் தாய்க்கிளி ____________ தேடச் சென்றிருந்தது. அது திரும்பி வந்து பார்த்தபோது கிளிக்குஞ்சுகள் இருந்த மரம் கீழே வீழ்ந்து கிடந்தது. அதைக் கண்ட தாய் பெருந்துன்பம் ____________. அது கீச்சிட்டவாறு தனது குஞ்சுகளை அங்குமிங்கும் தேடியது. அப்போது அங்கு வந்த பெரியவர் கிளிக்குஞ்சுகளைத் தாய்ப்பறவையின் ____________ விட்டுச் சென்றார். தாய்ப்பறவை மகிழ்ந்து தலையாட்டியது.

புள்ளிகள் 05

## 7) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. இராவணனது ஆட்சிக் காலத்தில் தமிழகத்தின் தலைநகர் எது?

______________________________________________

______________________________________________

2. தமிழரது மரபுவழி விளையாட்டுகளில் ஒன்றைத் தருக.

______________________________________________

3. ஐரோப்பியர் எவற்றை வாங்குவதற்காக ஆசிய நாடுகளுக்கு வந்தனர்?

______________________________________________

______________________________________________

4. இராவணனது சிறப்புப் பற்றிக் கூறும் நூல் எது?

______________________________________________

______________________________________________

5. சொற்பொருள் தருக.

கன்னை ____________________

அரங்கம் ____________________

புள்ளிகள் 10

## 8) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஒவியன் காலையில் தனது வகுப்பறைக்கு வந்தான். அப்போது அங்கு எவரும் வரவில்லை. அவன் தனது பள்ளிப்பையை மேசையில் வைத்துவிட்டு வகுப்பறையைத் தூய்மைப்படுத்தினான். பின்னர் எல்லாப் பொருட்களையும் அடுக்கி வைத்தான். ஆசிரியர் வகுப்பறைக்குள் வந்தார். வகுப்பறை மிகவும் தூய்மையாக இருப்பதைக் கண்டார். இருக்கைகளும் மேசைகளும் ஒழுங்காக அடுக்கப்பட்டு இருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். இன்று வகுப்பறையைத் தூய்மைப்படுத்தியது யார் எனக் கேட்டார். ஓவியனின் நண்பன் எழுந்து ஓவியனின் பெயரைக் கூறினான். நாம் ஒவ்வொருவரும் வகுப்பறையைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்று கூறி ஓவியனை ஆசிரியர் பாராட்டினார்.

1. ஓவியன் எப்போது தனது வகுப்பறைக்கு வந்தான்?

______________________________

2. எது மிகவும் தூய்மையாக இருந்தது?

______________________________

3. வகுப்பறையில் எவை ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தன?

______________________________

4. வகுப்பறையைத் தூய்மைப்படுத்தியவன் யார்?

______________________________

5. ஓவியனைப் பாராட்டியவர் யார்?

______________________________

புள்ளிகள் 10

**9) பின்வரும் சொல்லியங்களை உமது வாழிடமொழியில் எழுதுக.**

1. நான் உணவகத்தில் உணவு உண்டேன்.

______________________________________________ .

2. சிறுவர்கள் பாட்டுப் பாடினார்கள்.

______________________________________________ .

3. நான் நண்பிக்கு அஞ்சல் எழுதுகிறேன்.

______________________________________________ .

4. நாங்கள் பிறருக்கு உதவுவோம்.

______________________________________________ .

5. அறிவன் வீட்டில் முயல் வளர்க்கின்றான்.

______________________________________________ .

புள்ளிகள் 05

10) தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதையைத் தொடர்ந்து எழுதுக.



புள்ளிகள் 15

ஓர் எறும்பு குளத்தில் தவறி வீழ்ந்து விட்டது.

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை